ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8 ]
Total No. of Printed Pages : 8 ]
ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 59 ]
Total No. of Questions : 59 ]

**D**

**CCE PF**
**CCE PR**
**REVISED & UNREVISED**

**Question Paper Serial No. 10**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

**Code No. : 10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

**( ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Fresh & Private Repeater )**

ದಿನಾಂಕ : 27. 03. 2020 ] [ Date : 27. 03. 2020

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ–12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 59-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக : $10 \times 1 = 10$

1. தொழுந்தொறும் தொழுந்தொறும் என வருவது -

(A) இரட்டைக் கிளவி (B) அடுக்குத் தொடர்

(C) இரட்டுற மொழிதல் (D) தொகைநிலைத் தொடர்

2. போர்தொடுத்த வேந்தனை எதிர்த்து வெற்றி கொள்ளுதல் -

(A) வஞ்சி (B) உழிஞை

(C) தும்பை (D) வாகை

3. பைந்தமிழ் என்பது -

(A) பசும் + தமிழ் (B) பசுந் + தமிழ்

(C) பசுமை + தமிழ் (D) பைந் + தமிழ்

4. முரண் தொடை -

(A) இரவும் பகலும் (B) பேரும் புகழும்

(C) பாட்டும் பரிசும் (D) சீரும் சிறப்பும்

5. கலங்ங்கு என்பது -

(A) உயிரளபெடை (B) ஒற்றளபெடை

(C) குற்றியலுகரம் (D) குற்றிய கரம்

6. இந்தியா வென்றது -

(A) காலவாகு பெயர் (B) இடவாகு பெயர்

(C) பொருளாகு பெயர் (D) சினையாகு பெயர்

7. ஆடுபாம்பு என்பது -

(A) வினைத் தொகை (B) பண்புத் தொகை

(C) வேற்றுமைத் தொகை (D) உம்மைத் தொகை

8. 'சுண்ணம்' என்பதன் பொருள் -

(A) நிறம் (B) மணம்

(C) வண்ணம் (D) மகரந்தம்

9. அகவலோசை உடையது

(A) வெண்பா (B) ஆசிரியப்பா

(C) வஞ்சிப்பா (D) க ப்பா

10. செய்யுளுக்கே உரியது -

(A) பெயர்ச் சொல் (B) வினைச் சொல்

(C) உரிச் சொல் (D) இடைச் சொல்

II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக : 5 × 1 = 5

11. 'கொடுத்து' என்பது : வினையெச்சம்.

'கொடுத்த' என்பது : ........................................ .

12. முல்லைக்குத் தேர் ஈந்தான் : பாரி.

ஔவைக்குக் கனி கொடுத்தான் : ........................................ .

13. நூலைப் போல் : சேலை.

தாயைப் போல் : ........................................ .

14. கன்று வருடி மடி சுரக்கும் : பசு.

பாலை வார்த்தாலும் விடம் குறைக்காது : ........................................ .

15. மூன்று சீர்களைக் கொண்டது : சிந்தடி.

இரண்டு சீர்களைக் கொண்டது : ........................................ .

III. ஒரு தொடரில் விடை தருக : 8 × 1 = 8

16. இறைவன் பேரின்பப் பெருங்கடலாவது எப்போது ?

17. நிலமகள் யாரைக் கண்டு சிரிப்பாள் ?

18. தலைவி என்ன சமைத்தாள் ?

19. மதுரைச் சொக்கநாதன் மண்ணைச் சுமந்தது ஏன் ?

20. உணர்வே பெருகியிருப்போர் எதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள் ?

21. சைகாஸ் மரங்கள் எவ்வாறு காட்சியளிக்கின்றன?

22. 'புதிர்' என்பது யாது ?

23. அணி என்றால் என்ன ?

IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 15 × 2 = 30

24. மனிதர்கள் அறவழியில் செயல்பட தேவையான பண்புகள் யாவை ?

25. இலங்கை வேந்தன் சீதையைத் தொட அஞ்சியது ஏன் ?

26. ஒற்றுமையில்லா மனித குலத்திற்கு அருவியை எவ்வாறு உவமிக்கிறார் ?

27. திரு வி.க.-வின் நினைவாற்றலுக்கான சான்றுகள் தருக.

28. இறந்தகால உழைப்பு, முயற்சி நிகழ்காலத்தை செதுக்கிக் கொடுக்கும் என்பதனை வைரமுத்து எவ்வாறு விளக்குகிறார் ?

29. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

30. ஆரிய மன்னர்கள் தமிழ்நாட்டு அரசர்களை எவ்வாறு பழித்தனர் ?

31. இரட்டைக்கிளவியைச் சான்றுடன் விளக்குக.

32. யாப்பின் உறுப்புகள் யாவை ?

33. வெண்பாவின் இலக்கணம் யாது ?

34. பொன்முடியார் அரசன், அன்னை மற்றும் தந்தையரின் கடமைகளாக கூறுவன யாவை ?

35. மேலை நாடுகளில் உரையாடல் கலை எவ்வாறு மதிக்கப்படுகிறது ?

36. பறவைகள், விலங்குகள் மற்றும் மரங்கள் இன்றளவும் கோயில்களில் வணங்கப்படுவதன் நோக்கம் யாது ?

37. கிராமத்து மக்கள் கிராமத்தை விட்டுவிட்டு நகரத்திற்குச் செல்வதற்கான காரணம் யாது ?

38. வேற்றுமையணி என்பது யாது ?

V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக : 6 × 3 = 18

39. காலமறிதல் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.

40. இளையான் குடி மாறனாரும் அவருடைய மனைவியாரும் அமுதை எவ்வாறு சமைத்தனர் ?

41. நிலக்கரி தரும் நன்மைகளை எழுதுக.

42. கடுகு உள்ளத்தாரைப் பற்றி பாரதிதாசன் எவ்வாறு சாடுகிறார் ?

43. இளைஞன் பாறையில் மோதிய பந்தாய்த் திரும்பி வருவதால் உண்டாகும் விளைவுகள் யாவை ?

44. சீதைக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை என்பதை அனுமன் எவ்வாறு விளக்கினான் ?

VI. குறிப்பு வரைக : 2 × 3 = 6

45. திரிகடுகம்

46. பாரதியார்

VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 × 3 = 3

47. தற்குறிப்பேற்ற அணி

VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக : 4 × 3 = 12

48. "பட்டினி கிட பலாவையே உண்பதென்று"

49. "நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின நன்மை கண்டோமென்று கும்மியடி""

50. "தளத்தைத் தொட்டதும் தானே கதவுகள் திறக்கின்றன."

51. "திரவியம் திரைக்கரத்து எடுத்துச் சிந்தியே."

IX. கீழ் வரும் பழ மொழியை விளக்குக. 1 × 3 = 3

52. "ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்"

*அல்லது*

"சிறு துளி பெருவெள்ளம்"

X. அடிபிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

53. "இந்திய நாடிது" - என வரும் பாடல்.

*அல்லது*

"பட்டங்கள் ஆள்வதும்" - என வரும் பாடல்.

XI. எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக : $2 \times 4 = 8$

54. பேராசிரியர் சேதுப்பிள்ளையின் கலைநயமிக்க உரையாடலை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றினை விவரி.

55. பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகளை இளம்பெருவழுதி எவ்வாறு பட்டிய டுகின்றார் ?

*அல்லது*

சேரன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்து கூறியவற்றை தொகுத்து எழுதுக.

XII. கீழ் வரும் செய்யுளின் பொருளை விளக்கி எழுதுக : $1 \times 4 = 4$

56. "மாரிக் காலத்து இரவினில் வைகியோர் தாரிப்பு இன்றிப் பசித்தலைக் கொள்வது பாரித்து இல்லம் அடைந்தபின், பண்பு உற வேரித் தாரான் விருந்து எதிர்கொண்டனன்.

*அல்லது*

"பசியால் மடிந்தோர் படிக்கல் சுமந்தோர்
வதைத்துச் சிதைந்தோரும் என் மக்களே.
கைகால் பிடிப்போர் கைகட்டிக் கொள்வோர்
அடிமையிலும் அடிமையப்பா என் மக்களே."

XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : $2 \times 2 = 4$

மண் அரிப்பால் வளமான மேல்மண் முழுவதும் கரைந்தோடி வீணாவதோடு ஆறுகளையும் மேடாக்கி வெள்ளக் காலங்களில் பக்கத்து நிலங்களும் ஊர்களும் வெள்ளத்தில் மூழ்கச் செய்கின்றது. காடுகள் நீரை ஏற்றுச் சிறிது சிறிதாக விடுவதாலும் காட்டு மரங்களின் வேர்கள் மண்ணை இறுகப் பற்றி நின்று அரிப்பு ஏற்படாமல் தடுப்பதாலும் இத்தீமை தவிர்க்கப்படுகின்றது.

காடுகள் இருப்பதனால் தான் மழைநீர் மொத்தமாக வழிந்து ஓடுவதில்லை. இதனால் வெள்ளப்பெருக்கு, மண்ணரிப்பு மற்றும் நிலச்சரிவு தவிர்க்கப்படுகின்றன.

மழை இல்லாத பொழுது நாம் ஏரி குளங்களைப் பயன்படுத்துவதோடு, கிணறுகள் வாயிலாய் நிலத்தடி நீரையும் பயன்படுத்துகின்றோம். மற்றும் மழை இல்லாக் காலங்களில் காடுகளுக்கும் பசுமைச் செடிகொடிகளுக்கும் உள்ளூற்றாய் இருப்பதும் நிலத்தடி நீர்தான். நிலப்பரப்பு முழுவதும், மரங்களின் வேர்களும், புல்லும், சிறுவகைச் செடிகளும் நிறைந்து மழைநீர் உடனே வழிந்தோடிவிடாமல் தடுப்பதாலேயே இந்த நீர் சிறிது சிறிதாக மண்ணுக்குள் இறங்கி உள்ளே சேர்த்து வைக்கப்படுகின்றது. இந்த வகையில் காடுகளும் மரம்செடி கொடிகளும் புல் வகைகளும் நமக்கு அரிய பேருதவி புரிகின்றன.

வினாக்கள் :

57. a) காடுகளால் மண்ணரிப்பு எவ்வாறு தவிர்க்கப்படுகின்றது ?

b) மழைநீர் எவ்வாறு சேமித்து வைக்கப்படுகிறது ?

XIV. மடல் எழுதுக : $1 \times 5 = 5$

58. உன் எதிர்கால கல்வித்திட்டம் குறித்து நண்பனுக்கு / தோழிக்கு மடல் எழுதுக.

அல்லது

நீ வசிக்கும் பகுதியில் பெருமழைப் பொழிவினால் சிதைந்து கிடக்கும். சாலைகளைச் சீரமைத்துத் தருமாறு மாநகர ஆணையருக்கு மடல் எழுதுக.

XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக : $1 \times 5 = 5$

59. “நெகிழிப் (பிளாஸ்டிக்) பயன்பாட்டைத் தவிர்ப்போம்.”

அல்லது

“கணினி விளையாட்டுகளும்
கற்ற ல் கவனக் குறைவும்.”.